**செய்தி வெளியீடு எண் : 1208** **நாள் : 18.07.2022**

புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் இன்று (18.07.2022) தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு திருநாள் விழா கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை உள்ளுறை ஆணையர், முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உள்ளுறை ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. ஆ.கு.சு.விஜயன் அவர்கள் அகில இந்திய ஓவிய பயிற்சி பட்டறை மற்றும் ஓவியப்போட்டியினை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் தமிழ்நாடு திருநாள் விழாவினை குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்து பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி விழாப் பேருரையில் கூறியதாவது.

தமிழ்நாடு இல்லத்திற்கு வருகை தந்துள்ள பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நண்பர்கள், அலுவலர்கள், தில்லிவாழ் தமிழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு திருநாள் விழா வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தன் உடல்நிலையை கூட கருத்தில் கொள்ளாமல் தமிழ்நாடு என்கிற பெயர் மாற்றம் சூலை 18 ஆம் நாள் தமிழக சட்டமன்ற வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகின்ற இந்த வாசகத்தை தீர்மானமாக கொண்டு வந்த நாள் இந்த சூலை 18 ஆம் நாள். கடந்த காலத்தில் சுமார் 75 நாட்கள் உண்ணா விரதம் இருந்து உயிரை துறந்த சுந்தரலிங்கம் அவர்களின் கோரிக்கை மட்டுமல்ல தமிழர்களின் கோரிக்கையாக இருந்ததை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு சூலை 18 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு என்று பெயர் மாற்றத்தை அறிவித்து வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வை நிகழ்த்தினார்கள். அதனை தொடர்ந்து தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த

மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டு சொன்னார், சுந்தரலிங்கம் அவர்களின் உயிர் போயிருக்கிறது அதை நீங்கள் ஏளனமாக பார்க்காதீர்கள் தமிழ்நாடு என்கிற 5 எழுத்து இருக்கிற அந்த நிலையில் 5 உயிர்களை கூட நாங்கள் பலி கொடுக்க தயாராக இருக்கிறோம் என்கிற உறுதியோடு பணியாற்றியவர் மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதைத்தொடர்ந்து தமிழகத்துடைய முதலமைச்சராக நாடு போற்றுகிற முதலமைச்சராக இந்தியாவில் தலை சிறந்த முதலமைச்சராக இருந்து வருகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில், 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜூலை 18 அன்று அறிவித்த தமிழ்நாடு தினத்தை தமிழ்நாடு திருநாள் திருவிழா என்கிற நிகழ்வாக கொண்டாடப்படும் என்று மகிழ்ச்சியான அறிவிப்பை அறிவித்தார்கள். பல்வேறு அறிஞர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அதிகாரிகள் மட்டுமல்ல தமிழ் ஆர்வலர்கள் அத்தனை பேருடைய கோரிக்கையை ஏற்று இன்றைய நாள் தமிழ்நாடு திருநாள் என்கிற மகிழ்ச்சியான அறிவிப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் தில்லியில் தமிழர்கள் எல்லாம் ஒன்று கூடி குறிப்பாக கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை உள்ளுறை ஆணையர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், உள்ளுறை ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., அவர்கள், அரசு அலுவலர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து இந்நிகழ்ச்சியை மிக சிறப்பாக, மிகவும் நேர்த்தியாக, கலைநிகழ்ச்சிகள் தமிழ்நாட்டின் பண்பாட்டை போற்றும் வகையில், மிக பெரியளவில் இந்நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறோம். அதைவிட மிக சிறப்பாக சொல்ல வேண்டுமென்றால் அகில இந்திய ஓவிய போட்டி தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இல்லத்தில் மிக சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிருந்து

30 மாணவர்கள் பங்கேற்று பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாவது, இரண்டாவது, மற்றும் மூன்றாவது பரிசுகள் கொடுக்க இருக்கிறது. இந்நிகழ்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு கொடுத்துள்ள அன்பு சகோதர்கள் திரு சின்னத்துரை, திரு பி.முத்தையா மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன் எனக் கூறினார்.

இவ்விழாவில் ஒன்றிய அரசின் நிதித்துறை செயலர் முனைவர் டி.வி.சோமநாதன், இ.ஆ.ப., உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். திரு சின்னத்துரை, இணை உள்ளுறை ஆணையர் வரவேற்புரையும் திரு பி.முத்தையா, கூடுதல் இயக்குநர் நன்றியுரையும் ஆற்றினர்.

பின்னர் தமிழ்நாடு இல்லத்தில் பயின்றுவரும் மாணவிகளின் பரதநாட்டியமும் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு இயல், இசை நாடகமன்றத்தின் சார்பாக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், தப்பாட்டம், நையாண்டி மேளம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. சென்னை மாகாணம் குறித்த நிலஅளவை துறையின் சார்பில் வரைபட கண்காட்சி வைக்கப்பட்டது. மேலும் பூம்புகார், கோ-ஆப்டெக்ஸ் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றின் கண்காட்சிகளும் வைக்கப்பட்டிருந்தன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in